பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 11 ஜுல்கஃ 29 இதழ் 194
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-8-84

## "பதில் தாக்குதல் நடைபெறும்"

(கொழும்பு)

''வடபகுதிப் பயங்கரவாதிகள் எப்பகுதியிலாவது தாக்குதல் நடத்தினல் அதற்குப் பதில் தாக்குதல் நடத்தவேண்டும்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் விகாரை ஒன்றில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ''வன்செயல்களில் ஈடுபடும் ஒரு கூட்டம் கட்டுப்பாடின்றிச் செயல்படும்போது அவர்களைத் திருத்த

(8ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. தொண்டர் தீக்குளித்தார்

(சென்னை)

ஆந்திரப்பிரதேசத்தில் என். டி ராமராவ் அமைச்சரவையை கவர்னர் கலைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் சென்னையில் தீக்குளித்த தி. மு. க. உறுப்பினர் ஒருவர் நேற்று மரணமானர்.

இவர் நேற்று முன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்று மரணமானர்.

## ஜனர்த்தனன் திருப்தி

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை பெரும் திருப்தியைக் கொடுத்துள்ளது என்று உலக இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா. ஜனர்த்தனன் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்னையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேலும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாளைமறுதினம் கூடும் சர்வகட்சி மாநாடு கூட்டணி நாளை முடிவு செய்யும்

## பார்த்தசாரதி விஜயம் பெரும் மாறுதலை ஏற்படுத்துமா?

(சென்னை)

**நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளுமா?**

நாளை கொழும்பில் கூடும் கூட்டணியின் 'பொலிட்பீரோ' இது குறித்து முடிவுசெய்யும் என்றும், இதற்காகத் தாம் நாளை கொழும்பு செல்வதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் திரு. அமிர்தலிங்கம் நேற்றுப் பேசுகையில் மேற்படி விபரத்தை தெரிவித்தார்.

தமிழர் பிரச்னை தொடர்பான சர்வகட்சி மாநாடு குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிரதம ஆலோசகர் திரு, ஜி, பார்த்தசாரதியுடன் தாம் ஆலோசனை நடத்தியதாகவும் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் தற்போது நிலவும் மந்தநிலையை நீக்குவதற்கு திரு. பார்த்தசாரதி மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று தாம் அவரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு, பார்த்தசார

(8ம் பக்கம் பார்க்க)

## மன்னர் இளைஞருக்கு துப்பாக்கிச்சூடு

[யாழ்ப்பாணம்]

மன்னரைச் சேர்ந்த கே. விஜயகுமார் [28 வயது] என்ற இளைஞர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி நேற்று முன்தினம் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கட்பட்டுள்ளார்.

மன்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் நிலைமை மோசமானதால் அம்புலன்சில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

கட்டிவைத்துவிட்டு இவரை சீருடை அணிந்தவர்கள் சுட்டதாகக் கூறப்படுகிறது.

காலில் துப்பாக்கிச்சூட்டுக் காயமேற்பட்ட இவர் சிகிச்சை பெற்றுவருகிறர். [சு]

## சரோஜினி கொலை வழக்கு: இன்று தொகுப்புரை

(யாழ்ப்பாணம்)

சரோஜினி கொலை வழக்கில் இன்று அரச சட்டத்தரணி, எதிரியின் சட்டத்தரணி ஆகியோர் தொகுப்புரை நிகழ்த்துவார்கள். இதனைத்தொடர்ந்து நீதிபதி யூரி சபையினருக்கு உரை நிகழ்த்துவார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி பிரதிப்பொலிஸ் மாஅதிபர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பிரதிப் பொலிஸ் மாஅதிபராகதிரு. ரிரல் குணத்திலகா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பிலிருந்து கடமையாற்றுவார்.

வடபகுதி பிரதிப் பொலிஸ் மாஅதிபராகக் கடமையாற்றிய திரு. பிராங் சில்வாவின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாடசாலை பஸ்சேவை வழமைபோல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று பாடசாலை பஸ் சேவைகள் வழமைபோல் நடைபெறுமென்று வ.பி.போ.ச. தலைவா திரு. எஸ். கனகரத்தினம் நேற்றுத் தெரிவித்தார்.

தினமும் மாலை 5-30 மணி வரையே பஸ் சேவை நடைபெறுமென்றும், மறு அறிவித்தல்வரை இந்நிலை நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவடடத்தில் ஏற்கனவே பாடசாலை பஸ்சேவை நடந்த சகல இடங்களிலும் இன்று பஸ்சேவை நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

பிற்பகலில் பாடசாலை பஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கக் கட்டடத்தின் எரிந்த இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத்துண்டுகள் தொடர்பான விசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நடைபெறும்.

## கட்டட பொருள் கூட்டுத்தாபனத்தில் பொருட்கள் கொள்ளை!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினமிரவு பல பொருட்கள் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையர்கள் இக்கூட்டுத்தாபனக் காவலாளிகளான இராமநாதனையும், ஞானச்சந்திரனையும் தாக்கி, கட்டிவைத்துவிட்டு அவர்களிடமிருந்த திறப்பைப் பறித்து, இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.

இக்கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 29 ஸ்ரீ 4776 இலக்கமுடைய மினிபஸ்ஸை கனகபுரம் வீதியில் அனதரவான நிலையில் கிளிநொச்சிப் பொலிசார் மீட்டுள்ளனர்.

இருவர் 'டோர்ச்லைட்டு' டன் வந்து, கிளிநொச்சி 155ம் கட்டையில் வைத்து தன்னைப் பயமுறுத்தித் தாக்கி மினிபஸ்ஸைக் கடத்திச்சென்றதாக மினிபஸ் உரிமையாளர் சரவணபவான் கிளிநொச்சிப் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

காவலாளி இராமநாதனும், மினிபஸ் உரிமையாளர் சரவணபவனும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## வவனியா பொலிஸ் அதிபர் ஹேரத் கொலை: விசாரணையில் 4 ஊழியர்

(வவனியா)

வவனியா பொலிஸ் அதிபர் ஆர்தர் ஹேரத்தின் கொலை தொடர்பாக வவனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தைச் சேர்ந்த நான்கு ஊழியர்கள் இரகசியப் பொலிசாரினல் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டுபேர் எழுதுவினைஞர்கள்; இரண்டுபேர் சிற்றூழியர்களாவர்.

வவனியா பொலிஸ் அதிபர் ஹேரத்தின் மேசைக்குக் கீழ் மென்பந்து அளவில் வைக்கப்பட்ட இரண்டு குண்டுகள் வெடித்தபோது அவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நபர்கள் நால்வரும் இப்பொழுது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்தமாதம் முதல் வங்கிமூலம் ஓய்வூதியம் பெறுவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களில் ஓய்வூதியம் பெற்றவர்கள் அடுத்த மாதம் முதல் வங்கிமூலம் ஓய்வூதியம்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் துரையப்பா விளையாட்டரங்கில், அஞ்சல் அலுவலகங்கள்மூலம் ஓய்வூதியம் எடுத்தவர்களுக்கு கடந்த 3 தினங்களாக ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது.

இவர்களுக்கு வங்கி ஒன்றில் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கொன்றை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ள கடிதமொன்றும் வழங்கப்படுகிறது!

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தவேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:- யாழ் மாவட்டத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்கள்மூலம்மாதாந்த ஒய்வூதிய கொடுப்பனவுகள்பல கஷ்டங்கள் மத்தியில்கொடுக்க வேண்டியதை அறிவீர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பதில் நீதிபதி வீடு தீக்கிரை: சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியிலுள்ள மல்லாகம் பதில் நீதிபதியின் வீடு தீக்கிரையான சம்பவம் தொடர்பாக வடபகுதி சட்டத்தரணிகள் சங்கங்கள் கூட்டாக நடவடிக்கை எடுக்கவிருக்கின்றன

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தை உடன் கூட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம், மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்துடன் கூட்டாக நடவடிக்கை எடுக்கவிருப்பதாகச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்

(8 ம் பக்கம் பார்க்க)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல வருமானமுள்ள, போக்குவரவு வசதிகளையும் கொண்ட, 20 பரப்பு காணியும்; 40' × 40' விஸ்தீரணமுடைய வீடும் ஏழாலை தெற்கு, களவாவோடை, பெரியதம்பிரான் கோவிலுக்குச் செல்லும் ரோட்டில் உண்டு. காணி பிரித்தும் கொடுக்கப்படும். விலாசம்: சு. செல்வரத்தினம், ஏழாலை மேற்கு, கூட்டுறவுக்கிராமிய வங்கி சங்கக் கட்டிடம், சுன்னுகம். 1453

இருநூறிற்கும் மேற்பட்ட வீடியோ கசட்டுகள் தரமான தமிழ் ஆங்கில சினிமாப்படங்கள் பிரதிசெய்யப்பட்டு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. அத்துடன் ''வீடியோடெக்கும்'' [Model No: National 7500] விற்பனைக்கு உண்டு வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. அ ரட்ணசிங்கம் 51, சிவன்பண்ணை வீதி யாழ்ப்பாணம். 1439

பொது நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும மத்திபமாகவும் மதிப்புள்ள சுற்றுடலில் வீதி முகப்புடன் சுண்டிக்குளியில் அமைந்துள்ள 1½ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல 1300 C/O ஈழநாடு யழ்ப்பாணம். 1300

பழைய பூங்கா வீதியில் 4 பரப்புடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 615 ஆஸ்பத்திரி வீதியில் (காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக) அமைந்துள்ள லக்கி சேர்ஸ் சென்ரரில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் 24361. [1447]

### விற்பனைக்கு

கோப்பாய் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் பருத்தித்துறை வீதியில்கிணற்றேடு சேர்ந்த காணி 2 பரப்பு விற்பனைக்குண்டு. உடன்தொடர்பு கொள்ளவும். எஸ். அருள்நோதயராசா, வேதக் கோவிலடி, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு. 1448

பொதுஅறிவு நூல் தரமான விரிவான விளக்கமான விசேட பதிப்பு ஆசிரிய தெரிவுப் பரீட்ஷைக்குரியது. தொகுப்பு: த. ந. பஞ்சாட்சரம். ரூபா 20/- கிடைக்குமிடம் காந்தளகம், K. K. S. வீதி, யாழ்ப்பாணம் யூனைரெட் புத்தகசாலை, பருத்தித்துறை. 1449

### சேவை

உருத்திரபுரம் எள்ளுக்காடு விஷ்ணு ஆலயக்கட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளது. அடியார்கள் துயர் துன்பத்தை நீக்கும் அருட்தன்மையை நரசிங்கசமியார் வாயிலாக நேர்முகமாக வந்து கேட்டு சாந்தியடையவும். புதிய கோவில் அடிக்கல் நாட்டு வைபவம் வரும் விஜயதசமியன்று நடைபெறும். 1455

### வகுப்புகள்

I. C. M. A, P II Classes Commencing 1. 9. 84 Lecturers: F, Balakrishnan; R. N. Varendran; K. Nandakumar; A. Umashankar II-ம் வகுப்பு மாணவர்களுக்கு விசேட கொம்புயூட்டர் செய்கைமுறை வகுப்புக்கள் பள்ளிக்கூடங்களில் பாவிக்கப்படும் Sinclair Z X Spectrum கொம்புயூட்டர் மூலம் 10 - 9 - 84 ல் ஆரம்பிக்கப்படும். ராதாகிருஸ்ணுஸ் பொலிரெக்னிக், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 1446

## வானொலியில் இன்று

காலை

- 5-30 நாதாஞ்சலி
- 5-35 தோத்திரமாலை திரிபுரசுந்தரி நவரத்தின மாலிகா- சியாமளா நவரத்னமாலிகா
- 6-00 சைவநற்சிந்தனை
- 6-05 கிறிஸ்தவ நற்சிந்தனை
- 6-10 அறநெறி ஆரம்
- 6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
- 6-30 செய்திகள்
- 6-40 அறிவிப்புகள்
- 6-50 மெல்லிசைப் பாடல்
- 7-00 பாட்டு சத்தியராணி ஆனந்தபிரசாத்
- 7-30 மாகாணச் செய்திகள்
- 7-35 இசையமுதம்
- 8-05 வாத்திய விருந்து
- 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
- 8-45 காலை நிகழ்ச்சிகள் முடிவு

மாலை

- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 பக்திநெறி
- 6-30 விஞ்ஞான தீபம்

இரவு

- 7-00 களத்துமேடு
- 7-15 மருதமலர்
- 7-30 உலகச் செய்திகள்
- 7-40 நாட்டுப்பாடல் - கும்மி
- 7-45 மெல்லிசைப் பாடல்
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 9-00 செய்திகள்
- 9-10 செய்தியின் பின்னணியில்
- 9-15 அறிவிப்புகள் வாத்திய இசை
- 9-30 பேச்சு தவச்செல்வியாரின் தமிழ்த் தொண்டு குறமகள்
- 9-45 பாட்டு சக்திதேவி குருநாதபிள்ளை
- 10-30 பக்திப்பாடல்கள்
- 11-00 ஒலிபரப்பு முடிவு

## 9,000ரூபா கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிகரெட் வியாபாரி ஒருவரிடம் இருந்து சுமார் 9 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் மூன்று இளைஞர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் மட்டக்களப்பு இ.போ.ச டிப்போவுக்கு அருகில் அமைந்துள்ள கடையொன்றின் முன்னுல் நடைபெற்றது. மேற்படி வியாபாரி குறிப்பிட்ட கடையில் சிகரெட் விற்பனையை முடித்துக்கொண்டு பணத்துடன் சைக்கிளில் ஏறிய போது மூன்று இளைஞர்களும் துப்பாக்கி சகிதம் வந்து பயமுறுத்தி பணத்தை பறித்துக்கொண்டு பக்கத்திலுள்ள ஒழுங்கைக் கூடாக ஓடி மறைந்து விட்டதாக கூறப்படுகிறது.

மட்டக்களப்பு பொலிசார் கொள்ளையர்களைத் தேடி வலை விரித்துள்ளனர்.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சரவணையூர் கதிர் வேலாயுத சுவாமி கோவில் வருடாந்தஉற்சவத்தின் பொழுது கந்தப் புராணத்தைப் பற்றி தொடர் விரிவுரை நிகழ்த்திய வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. சி. மருத பிள்ளைக்கு திரு. செ. தேவராசா தலைமையின் கீழ் பரராட்டு விழாநடை பெற்று பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். கந்தப் புராணப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கட்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## இசைமன்றம்

[யாழ்ப்பாணம்]

ஈச்சமோட்டையில் மூம்மூர்த்திகள் இசைமன்றமொன்று நிறுவப்பட்டுள்ளது. இம்மன்றம் 10 பேர் கொண்ட செயற்குழுவொன்றையும் தெரிவுசெய்துள்ளது.

## வடபகுதியைச் சேர்ந்த 300 இளைஞர்கள் காலியில் தடுத்து வைப்பு

### பாராளுமன்றத்தில் அக்மீமன எம்.பி.

[கொழும்பு]

''வடபகுதியைச் சேர்ந்த 300 இளைஞர்கள் காலியிலுள்ள தொழிற்பயிற்சிக் கூடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனுல் அங்கு பயிற்சி பெற்றுவந்த இளைஞர்கள் தற்போது பயிற்சியை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்''.

இவ்வாறு அக்மீன எம். பி. திரு. றிச்சாட் பத்திரானு பாராளுமன்றத்தில் அவசர கால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் 'உரையாற்றுகையில் கூறினுர்.

(இ-வெ)


வர்த்தகர்களுக்கு

**விசேஷ அறிவித்தல்**

உங்களுக்குப் பணக்கஷ்டம் ஏற்படுகின்ற போது உங்களிடம் இருக்கும் வர்த்தகப் பொருட்களை எங்களிடம் ஒப்படைத்து உங்களுக்குத் தேவையான பணத்தினை பெற்றுக்கொள்ளவும். பின்பு குறுகியகால எல்லைக்குள். பணத்தினை கொடுத்து உங்கள் பொருட்களை மீட்டுக்கொள்ளலாம்.

**த பினுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23680


உ

**திருமண அழைப்பு**

மணமகன்:
**சிவஶ்ரீ கதிர்காமநாதன் ஐயர்**
(பழனியாண்டவர் தேவஸ்தானம், கோண்டாவில்)

மணமகள்:
**நடராசா அருளாம்பிகை**

காலம்:
29–08–1984 ஆவணி காலை 6-00 – 7-00 மணி

இடம்:
உரும்பிராய் ஞானவைரவ தேவஸ்தானம்

உறவினர்களும் நண்பர்களும் தவறுது சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கிறேம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| சிவப்பிரகாசம் தம்பதிகள் | நடராசா தம்பதிகள் |
| கோப்பாய் ரேட், | உரும்பிராய் மேற்கு, |
| உரும்பிராய். | உரும்பிராய். |

(1428)

உ

**திருமண அழைப்பு**

மணமகன்:
**செல்வன் சு. செல்வேந்திரன்**
(இலங்கைவங்கி சர்வதேசக் கிளை, கொழும்பு)

மணமகள்:
**செல்வி பா. ஜெயபவானி**

இடம்:
கற்பகப்பிள்ளையார் கோவில், உரும்பிராய்.

காலம்:
29–08–1984 புதன்கிழமை

நேரம்:
காலை 7-25 தொடக்கம் 9-00 வரை

வரவேற்பு:
மணமகன் இல்லம் மாலை 4-00 மணி

அழைப்பு:

| | |
|---|---|
| திருமதி | திருமதி |
| பொ. சுப்பிரமணியம், | பாலகிருஷ்ணன், |
| ''லோகவாசா'', | உரும்பிராய் வடக்கு, |
| கோப்பாய் வடக்கு, | உரும்பிராய். |
| (மணமகன் இல்லம்) | (மணமகள் இல்லம்) |

(1454)


**பற்றீசியன் இன்ஸ்ரியூட்ஸ்**

கீழ் குறிப்பிட்டவைக்கு எமது அடுத்த வகுப்புகள் 1-9-84ல் ஆரம்பமாகும்

- ✶ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- ✶ கொம்பியூட்டர் புரோகிராமிங் (COMPUTER PROGRAMMING)
- ✶ படம்வரைதல்–பில்டர்ஸ் குவான்றிறிஸ் உட்பட (DRAFTS AN SHIP—INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- ✶ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)

} 6 மாதகால பகுதி நேர வகுப்பு

- ☆ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)
- ✶ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)

} 3 மாத கால பகுதி நேரம்

- ✶ நீர் குழாய் இணைப்பு (PLUMBING)
- ☆ மின் இணைப்பு (ELECTRICAL WIRING)

} 1 மாத பகுதி நேரம்

- ★ காற்று சீராக்கல் உபகரணமும் றெவ்றிஜறேஷனும் (AIRCONDITIONING AND REFRIGERATION)

(இது ஒருவருட முழுநேர வகுப்பும் பயிற்சியும்)

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் 30-8-84க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர். ஆகவே உடனே விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# ★ இந்திய விமானக் கடத்தல்

# டுபாயில் கடத்தல்காரர்கள் சரண்;

# பயணிகள் புதுடில்லி திரும்பினர்!

புதுடில்லி, ஆக. 26

இந்திய 'போயிங்737' விமானக் கடத்தல் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு டுபாய் விமான நிலையத்தில்முடிவடைந்தது. விமானத்திலிருந்த பயணிகளேயும், சிப்பந்திகளேயும் கடத்தல் காரர்கள் விடுதலைசெய்ததுடன் தாமும் டுபாய் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

விடுதலையான சுமார் 73 பயணிகளும், ஆறு விமானச் சிப்பந்திகளும், நேற்று அதிகாலை 4-30 மணியளவில் டுபாயிலிருந்து விசேட விமானமொன்றில் புதுடில்லி வந்தடைந்தனர். இவர்களை உறவினர்களும், நண்பர்களும் விமான நிலையத்தில்வரவேற்றனர்.

புதுடில்லியிலிருந்து சண்டிசார் ஜம்மு நகரங்கள் வழியாக ஸ்ரீநகருக்குச் சென்றபோதே இவ்விமானம், பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டது. முதலில் பாகிஸ்தானின் லாகூர், கராச்சி விமான நிலையங்களில் இவ்விமானம் இறக்கப்பட்டது. இவற்றில் மொத்தம் 7 பயணிகள் விடுதலை செய்யப்பட்டனர் பின்னர் இவ்விமானம் டுபாய் நோக்கித் திசைதிருப்பட்டது.

கடத்தல்காரர்கள் இவ்விமானத்தை அமெரிக்கா செல்ல அனுமதிக்கவேண்டுமென்றும், சீக்கியர்களுக்கான 'காலிஸ்த்தான்' தனி நாடு அமைக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

டுபாயில் இவ்விமானம் தரையிறக்கப்பட்டு 15 மணி நேரம் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுருந்தது. கடந்த வியாழக்கிழமை முதல் 43 மணி நேரம் இவ்விமானக் கடத்தல் சம்பவம் நீடித்தது.

இவ்விமானத்தின் துணைப் பைலட்டை கடத்தல்காரர்கள் தாக்கிக் காயப்படுத்தியதுடன் இருக்கையொன்றுடன் சேர்த்துக்கட்டி வைத்தனர் என்று கூறப்பட்டது. ஆறுகடத்தல் காரர்களே இக்கடத்தலை நடத்தினர். விமானக் காப்டன் மேத்தா பல கடத்தல் நாடகங்களுக்கு முகங்கொடுத்தவர். இக்கடத்தல்காரர்கள் மிகவும் மோசமானவர்களாக இருந்தனர் என்று அவர் தெரிவித்தார்.

டுபாயில் சரணடைந்துள்ள இந்திய விமானக் கடத்தல் காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை ஐக்கிய அரபு இராச்சியத்திடமே வழங்கியுள்ளதாக இந்திய சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் திரு. குஷித் அலம் கான் தெரிவித்தார். (கி)

## 40 குடும்பங்களை குடியமர்த்த ஏற்பாடு

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் 40 குடும்பங்களை முதற்கட்டமாக மறவன்புலோ கிராமத்தில் குடியமர்த்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கு குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களுக்கு தலா 18,000 ரூபா பெறுமதியான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்வுள்ளன.

இப் புனர் வாழ்வுத்திட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் திணைக்களம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983, அறவழிப் போராட்டக் குழு ஆகியவை ஈடுபட்வுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

## செங்கடலில் கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்படவில்லை!

### சவுதிஅரேபியா அறிவிப்பு

ஜெத்தா, ஆக. 26

சவுதி அரேபியாவில் செங்கடல் பகுதியில் கண்ணி வெடிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

அமெரிக்க, பிரெஞ்சு கடற்படையுடன் சவுதி அரேபியக் கடற்படையும் இணைந்து கண்ணி வெடிகளைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டிருந்தது பிரிட்டன், இத்தாலி கடற்படைகளும் இப்பணியில் இறங்கியிருந்தன.

சுயஸ் கால்வாய்ப் பகுதியும் கண்ணி வெடிகளைத் தேடும் பணிக்கு உட்பட்டிருந்தது. இங்கும் எதுவும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து விரைவில் இப்பணி முடிக்கப்படும் என்று சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

சுமார் 20 கப்பல்கள் சூயஸ், செங்கடல் பகுதியில் கண்ணி வெடிகளுக்கு இலக்காகிச் சேதமடைந்தன. இவற்றுக்கு லிபியாவும், ஈரானுமே பொறுப்பென்று எகிப்து குற்றஞ்சாட்டியிருந்தது.

கண்ணி வெடிகளை கண்டுபிடிக்கும் பணியில் சோவியத் கப்பல் ஒன்றும் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (கி)

## சுகாதார விழா

(மன்னர்)

தலைமன்னர் குடும்ப நலத் திட்டச்சங்கத்தினல் தலைமன்னர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சுகாதாரவிழா நடத்தப் பட்டது.

## ஓய்வூதிய திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில், இன்று, அளவெட்டி அச்சுவேலி கோப்பாய் பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

நாளை 28-ம் தேதி காங்கேசன்துறை, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

இம்மாதம் 29-ம் திகதி பருத்தித்துறை, கரவெட்டி, வல்வெட்டித்துறையிலுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

இம்மாதம் 30-ம் திக்தி கரவெட்டி, சுன்னகம். ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ளவர்களுக்கும், 31-ம் திகதி பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுன்னகம், ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். (க)

## 'சுதந்திரக் கட்சி [redacted] நாட்டைப் பிரிக்க ஆதரவளிக்காது!'

[இ. கந்தசாமி]

''சுதந்திரக்கட்சி பயங்கரவாதத்திற்கோ, நாட்டைப் பிரிப்பதற்கோ ஆதரவளிக்கவில்லை. விவசாய அமைச்சர் இதுகுறித்து எம்மீது சுமத்திய குற்றச்சாட்டை நான் திடமாக மறுக்கிறேன்''

இவ்வாறு கொழும்பு மத்திய தொகுதி எம். பி. ஜனப் ஹலீம் இஷாக் அவசரகால நீடிப்பு பிரேரணைமீது பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

80-ஆம் ஆண்டு வேலைநிறுத்தத்தினல் வேலை இழந்தவர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் வரை இன்னமும் வேலையில் சேர்க்கப்படவில்லை. நீதியின் பேரால் கேட்கிறேன் அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அன்று வேலை இழந்தவர்களில் அநேகர் மரணமடைந்து விட்டனர். சிலர் தற்கொலை செய்து கொண்டனர். பலர் பட்டினியால் வீதியில் அலைகின்றனர்.

## தமிழகத்தில் மறியல் போராட்டம்:

# இரண்டு லட்சம் பேர் பொலிஸாரினல் கைது!

### தி. மு. க. ஆதரவாளர் தீக்குளிப்பு!!

சென்னை, ஆக. 26

தமிழ்நாட்டில் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் இரண்டு லட்சம் பேர் கைதானர்கள். இவர்கள் அரசாங்கக் கட்டிடங்கள் முன்பாக தமது போராட்டத்தை நடத்தினர்கள் என்றுபொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சென்னை நகரில் மட்டும் சுமார் பத்தாயிரம்பேர் கைதானர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் 14 தோழமைக்கட்சிகளும் இம்மறியல் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதே இதன்நோக்கமென்று கூறப்பட்டது.

சென்னையில் நேற்று தீவிர திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர் ஒருவர் தீக்குளிப்பிலும் இறங்கினர். ஆனல் அவர் பொலிஸாரினல் தடுக்கப்பட்டு பலத்த தீக்காயங்களுடன் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கி)

✯ அமெரிக்கா ✯ கனடா ✯ ஜேர்மனி
✯ பிரான்ஸ் ✯ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

## மட்டக்களப்பு பஸ் டிப்போ பாதுகாப்பு 'ஏற்பாடு

### பாராளுமன்றில் பிரதி அமைச்சர்

(கொழும்பு)

மட்டக்களப்புபோக்குவரத்து சபை டிப்போலின் பாதுகாப்புப் பணியைக் கொழும்பைச் சேர்ந்த ''ஓரியண்ட்,' பாதுகாப்புச் சேவை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்த டிப்போவில் இவ்வாண்டு மே மாதம் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகிறது. விசாரணைகள் முடிவுற்றதும் சம்பவத்தை அடுத்துத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களின் நிலை குறித்துத் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு போக்குவரத்துச் சபைப் பிரதி அமைச்சர் திரு. எச். பி அபயரத்ன பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினர்.

மத்துகம எம். பி திரு. அனில் முனிசிங்காவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

சம்பவதினம் மாலை 6 10 மணியளவில் கொள்ளை இடம் பெற்றபோது எஸ்.ஜே.செல்லர், எஸ் சிவராமலிங்கம், எம். ஆர். லோரன்ஸ், ரி. சிவராஜா, ஜி ஜீவகுமார், ஆர். பாலசுபிரமணியம், ஆர். எல். கிரிகரி, விமலவன்ச ஆகியோர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இக்கொள்ளையை அடுத்து எஸ். எல். யூ. லெப்பே, எம். தங்கராஜா, எம். ஆதம் பாவா, என். சோதிலிங்கம் ஆகியோரே தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## லடண்ன் பயணமானர்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப.நோ கூ சங்க இயக்குநர் சபைத் தலைவர், சட்டத்தரணி மு. சண்முகநாதன் லண்டன் பயணமானர்.

இவர் சரவணை யூரை சேர்ந்தகாலஞ் சென்ற சி. முருகேசபிள்ளை, பார்வதிப்பிள்ளையின் புதல்வனவார்.

## மணிவாக்கு

காயைக் கனியாக்குவது வெப்பம். கதகதப்பு இல்லாவிட்டால் அது கனியாகாது. கல்நெஞ்சைப் பிசைந்து கனிந்த நெஞ்சமாக்குவது உள்ளுணர்ச்சி.

— அருள்விருந்து

## நமது நோக்கு

### அன்னையரின் அழுகுரல்

இந்தியப் பெண்கள் செய்கிற தியாகத்தையும் அவர்களுக்கு ஏற்படுகிற புத்துணர்ச்சியையும் பொறுத்தே இந்தியாவிற்கு கதிமோட்சம் உண்டாக முடியும் என்று தான் திடமாக நம்புகிறதாக மகாத்மா காந்தி அடிக்கடி நினைவுறுத்தி வந்திருக்கிறார்.

இந்தியாவிற்கு மட்டுமல்ல, ஓரளவிற்கு அனைத்துலகுக்குமே சமாதான வாழ்வு கிடைப்பதுமகாத்மா வளர்த்த பெண் ஒருவரின் தியாகத்தில் தங்கியிருப்பதை நடுநிலைமை காணவல்ல எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

யாரும் கேட்டறியாத அமெரிக்க சஞ்சிகை ஒன்று, ஹொங்கொங்கில் வெளியாகும் 'அடிவருடி'ப் பத்திரிகை இன்னொன்று இந்திராவை ஏளனம் செய்தால் எங்கள் அரசின் விடயம் வெற்றியாகுமென்று நம்பும் பத்திரிகைப் பதர்கள் இங்கும் உண்டு.

நாம் எடுத்த விடயம் வேறு; இருப்பினும் உலகத்தை நடுங்கவைத்த நெப்போலியன் அளித்த விடைக்கும் இதுபொருத்தமானதென்பதால் தாய்மைக்கு முதலிடம் அளிப்பதை முக்கியமாகக்கொண்டோம்.

''பிரான்ஸ் பெருமைக்குப் பேர்போன தேசம்; இருப்பினும் தாங்களே நாட்டின் பலத்துக்கு ஒரு உத்தம உதாரணம். இன்று இந்த நாட்டின் பற்றாக்குறை என்ன?'' இதுவே நெப்போலியனுக்கு அவருடைய சகாக்கள் வி[illegible]த்த வினா.

''நல்ல அன்னையர்'' என்றிரண்டு சொற்களில் வந்தது விடை.

பூவுலகக்கைலாயம் என்று கூறப்படும் பாரீஸ் மாநகரில் பெருமளவிற்குக் காணப்படும் விலைமாதர் வெளிவெளியாகக் கூறும் கருத்தும் இதுவே.

''எங்கள் பிள்ளைகளுக்கு கிடைக்காத அதிர்ஷ்டம் 'நல்ல தாய்மார்'; அவர்களின் பிள்ளைகளுக்கு இக்கதி நேரிடாது பாதுகாக்கவே நாம் இந்த இழிதொழிலில் இறங்கி உள்ளோம்.''

'நல்ல தாய்மார்' என்று நெப்போலியன் சொன்னபோது 'நல்ல' என்ற அவசியமற்ற சொல்லை தாய்மாரின் ஆன்மீக உணர்வை வற்புறுத்தும் நோக்கத்துடன் பிரயோகித்தாரென்பது தெளிவு.

பெண்ணை தியாகத்தின் திருவுருவமென்றால் தாயை என்னென்று வர்ணிப்போம்?

இந்தியப் பெண்களுடன் தொடங்கின நாம் யாழ்ப்பாணத் தாய்மாரின் அவலக்குரலை அறிமுகப்படுத்துதலை தாமதித்தல் நியாயமாகாது.

யாழ்ப்பாணத்தில் சிலகாலமாக வேறெந்தக் குரலையும் கேட்பதரிது. சிராத்த தினங்களுக்கு ஒரு முடிவில்லைப்போலும்; காணாமற்போன இளைஞர் பற்றிய கவலை தொடர்கின்றது.

யாழ்ப்பாணத் தாய்மார் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஊர்வலம் ''பிள்ளைப் பிச்சை''யைப் பொறுத்ததென்றால் அதன் அவசரத்தை அரசு உணர்ந்து உடனடியாக நிறைவேற்றவேண்டும்.

இன்று பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. விடுதலை நாட்களில் வீட்டில் இருந்த மாணவச் செல்வங்களை நூற்றுக்கணக்கில் கைது செய்த ராணுவம் அன்னையரின் கண்ணீரைத் துடைப்பதற்கு தயங்க எதுவித காரணமுமில்லை. 'எல்லோரும் பயங்கரவாதிகளே' என்ற மந்திரம் தீராக் கேட்டை வரவழைக்கும்.

இன்று பாடசாலைகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் வேறெந்தஇடத்திலும், நாட்டில் தமிழ் மக்கள் வாழும் எந்த மூலைமுடுக்கிலும் பேசப்படுவது 'தமிழர் நெருக்கடி; யாழ்ப்பாணத்தில் தினமும் நடைபெறும் தீமைகள்'.

இதற்குப் பரிகாரம் காண்பதற்கு இங்கு வாழும் இளைஞர்களை - குறிப்பாக மாணவர்களைக் கைதுசெய்வது ஒரு இலகுவான வழியென்று அரசு நினைத்தால் அது பெருந் தவறு.

'பயங்கரவாதம்' என்று அரசு பாடம் பண்ணும் இயக்கத்தை நாம் எவ்விதத்திலும் ஆதரிக்கவோ அல்லதுஉற்சாக மூட்டவோ முயன்றதில்லை. ஆனால் அந்த தீவிர முயற்சியை இத்தகைய கொடூரமான செயல்கள் தூண்டுவதை ஆயிரக்கணக்கான அப்பாவித் தாய்மார் அன்று வெளியிட்டிருக்கின்றனர்.

இல்லறதர்மமும், குடும்ப பிணிப்பும் யாழ்ப்பாண சமூகத்தின் விசேட பண்பு. பழமைக்குறைவிடமான இப்பகுதி அன்னையர் திரண்டு ஊர்வலம் நடத்துவதும் கோஷம் எழுப்புவதுமென்றால் நிலைமை 'சீரியஸ் என்பது விளக்கம்.

இதனை நன்கு விளக்க வல்லவர் யாழ்ப்பாண அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம்; பந்தோபஸ்து அமைச்சர் இதற்கு ஆவன செய்ய அக்கறைகாட்டியிருப்பது நல்ல அறிகுறி.

எவ்விதத்திலும் கபடமில்லாத அன்னையரின் அவசரவேண்டுகோள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே எமது திடமான கருத்து.

மாணவர் பட்டாளம் பாடசாலைகளுக்கே உரியது. விசாரணை முகாம்களுக்கல்ல.

# ''சுதந்திரக் கட்சியின் போக்கு பிரிவினைக்கு ஆதரவளிக்கிறது'

## விவசாய அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

''பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும்; இந்த நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது என்றெல்லாம் இங்கு கூறிவரும் சுதந்திரக் கட்சியினரின் போக்கு; பயங்கரவாதிகளுக்கு உதவியளிப்பதாகவும் நாட்டுப்பிரிவினைக்கு ஆதரவளிப்பதாகவும் உள்ளது,''

இவ்வாறு விவசாய அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றத் தயங்கும் சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி பண்டார நாயக்கா அதுபற்றி வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டியளிக்கிறார்.

''சுதந்திரக்கட்சியினரை இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் நாட்டுப் பற்றற்றவர்கள் என்றே பெரும்பாலான மக்கள் எண்ணுகிறார்கள்.

''பயங்கரவாதிகளின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்க ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயம் பெரிதும் உதவியது.

''வெளிநாடுகளில் பயங்கரவாதிகளின் பிரச்சாரம் வெற்றியளித்த போதிலும் அப்பிரசாரங்கள் பொய்யானவையென இப்போது பல நாடுகள் உணர்ந்துள்ளன.

இதனால் அவர்களுக்கு ஆயுதங்களை வாங்குவதற்கு இப்போது போதிய பணம் கிடைப்பதில்லை. பணத்தட்டுப்பாடு காரணமாக வங்கி கொள்ளைகளில் ஈடுபடுகிறார்கள்.

''சென்னை குண்டு வெடிப்புச் சம்பவம் ஏனைய உலக நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவே உள்ளது.

''பயங்கரவாதிகள் அடைக்கலம் புகுந்த பல நாடுகள் அவர்களுக்கு புகலிடம் அளிப்பதனால் தமக்கே ஆபத்து ஏற்படும் என தற்போது உணர்ந்துள்ளனர்.

## தெல். துர்க்காதேவி திருவிழா

தெய்வத்தமிழ்க் காவியச்சிந்தனையால் சிறப்புற்ற மக்கள் பல தெய்வமூர்த்தங்களில் நம்பிக்கை வைக்கலாயினர். பக்தர்களின் மன திருப்தியே அந்தந்த கோவில்களின் சிறப்பான மகிமையை எடுத்தியம்புகின்றன. ''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதன்மூலம் கோவில்களின் முக்கியத்தை உணர்ந்த மக்கள் பல ஆலயங்களையும் அமைத்து வழிபட்டனர். இவ்வாறான கோயில்கள் அந்தந்த ஊரின் பெருமையால் உயர்ந்துள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் புனர்வாழ்வு கருத்தரங்கு

(சாவகச்சேரி)

''இன்று யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்துள்ளஅகதிகள் முகாம்களில் தங்கி இருக்கின்ற அகதிகளின் எதிர்காலப் புனர்வாழ்வுக் திட்டங்கள் பற்றி எம் மத்தியிலே இருக்கின்ற தொண்டர் ஸ்தாபனங்கள் கூடியளவு அக்கறை காட்டி வருகின்றன, இத் திட்டங்களை மிக விரைவில் முன்னெடுத்துச் செல்ல, குடி பெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவை வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இவ்வாறு குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவையின் தலைவர் திரு.வீ.எஸ் துரைராஜா' கைதடி அகதிகள் முகாம் மண்டபத்தில் நடைபெற்ற அகதிகள் புனர்வாழ்வுத் திட்டம் தொடர்பான விஷேட கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இக் கருத்தரங்கிற்கு வடபகுதியில் இருக்கின்ற சகல முகாம்களிலும் இருந்தும் அகதிகள் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தனர்.

இக் கருத்தரங்கில் பேரவையின் பொதுச் செயலாளர் திரு.ஆ.இராசலிங்கம், குருகுலம் ஸ்தாபகர் திரு.எஸ். கதிரவேலு உட்பட பலர் கருத்துரைகள் வழங்கினர்.

## நவாலி— அட்டகிரிக்கந்தன் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நவாலி அட்டகிரிக் கந்தசுவாமி கோவில் மண்டலாபிஷேக சங்காபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

45 நாட்களுக்கு முன் வெகு சிறப்பாக நடை பெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தினமும்' அபிஷேகம்- விஷேட பூசை, லட்சார்ச்சனை, திருவிழா என்பன தினமும் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

பல இலட்சம் ரூபா செலவில் நடைபெற்ற திருப்பணி, கும்பாபிஷேகம் என்பன வற்றைத் தொடர்ந்து நடைபெற்ற விழாக்களிலும், மண்டாபிஷேக பூர்த்தியான இச் சங்காபிஷேகத்திலும் திருவிழாவிலும் பெருந்தொகையானமக்கள் பங்குபற்றினர்.

(ப)

### நல்லை முருகன் பூங்காவனத் திருவிழாஇன்று

## பாடிப் பரவப் பெற்றேனே

நாயேன் நற்றவம் செய்தேனல்
    நல்லூர்க் கந்தா என்றேநின்
கோயில் காலால் வலஞ்செய்து
    குழைந்து கைத்தலை மேல்வைத்து
வாயில் நுழைந்து நினைவணங்கி
    வாயால் நின்புகழ் வாழ்திசைத்துப்
பாயா நதிபோல் நீர்பெருகப்
    பரவிப் பணியப் பெற்றேனே

அங்கம் புரண்டு வீதிவலம்
    அடியார் அனந்தம் பேருருளத்
துங்க முயர்ந்த கோபுரத்துத்
    துலங்கு மசையா மணியொலிக்கச்
சங்க நாத வாச்சியங்கள்
    சாம வேத மோடார்ப்ப
எங்கு மடியார் கூட்டமுடன்
    யானும் பரவப் பெற்றேனே

கண்ணால் நினது எழில்கண்டு
    கலந்த அன்பில் மெய்பொடிப்ப
அண்ணல் பவனி வரும்போது
    அடியார் கூட்ட முடன்பின்னே
பண்ணால் இசைந்த திருமுறைகள்
    பாடிப் பரவச மாகிமுனை
பண்ணிய புண்ணியப் பயனென்றே
    பாடிப் பரவப் பெற்றேனே.

—'சேந்தன்'

★ ★

## ஆறுமுகா ஆறுதல்தா

ஓராறு முகத்தானே ஆறுதலைத் தருவாய்
இராறு கரத்தானே அரவணைப்புந் தருவாய்
ஓராத உள்ளத்து இருண்மலங் கடிந்து
தீராத பேரின்ப வாழ்வெமக்குத் தருவாய்

ஓராத தமிழ்த் தெய்வமும் நீயானாய்
இராறு உயிருடனே மூவாறு மெய்யானாய்
ஆறுத தமிழருள்ளம் தழலாய் வேகுதையா
ஆராதித் தவர்தம்மைக் காத்தருள வாருமையா

சுகந்த மிகு சுனையிலே நீராடி வந்து
உகந்த அடியார் மனநிறைவுந் தருவாய்
சுகந்த மிகு காலினிலே தோகையருடனே
கலியாணக் கந்தனாய் காட்சியும் தந்தாய்

—யாழோன்

★ ★

## அமரரை மீட்ட வேல் அற்றதோ நினது கையில்

ஈராறு செவியிருந்தும் ஒருசெவியில் கேட்கலையோ
    ஏழை அழுத குரல்கள்
ஈராறு கண்ணிருந்தும் ஒரு கண்ணால் பார்க்கலையோ
    நின்னடியார் எய்து துயரம்
பன்னிரண்டு கையிருந்தும் ஒருகையும் அணைக்காமல்
    பார்த்திருப்ப தழகாகுமோ
நின்திருவடியே தஞ்சமென்று நிதம்நாடி வருவோரை
    நின்கடமை காப்பதன்றோ!
கலியுகவரதனே; கதியெமக் காருமில்லை
    கலங்குகின்றோம் கந்தா! நாங்கள்
பொலிவான நல்லையில் குடிகொண்ட புனிதனே
    பொங்கு தமிழ்க் காவலோனே
அவுணரை அழித்தவேல் அமரரை மீட்டவேல்
    அற்றதோ நினதுகையில்
அவலமுறும் அன்பர்துயர் அடியோடு தீர்க்கவே
    அழகு மயிலேறி வாராய்!

— க. ந. கங்கைவேணியன்

# போதைவஸ்துக் கடத்தலில் 440 தமிழ் இளைஞர்கள்!

[க. ஜீவகதாஸ்]

போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதன் காரணமாகச் சுமார் 440 தமிழ் இளைஞர்கள் பிரான்ஸ் சிறைக்கூடத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களதுவழக்குகள் சுமார் ஒருவருட காலமாகியும், இன்னமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

திருமணமாகி அங்கு வாழ்ந்த கணவன்மார்களும், சிலர் இக்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதன் காரணமாக இவர்களது குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருக்கின்றனர்.

இதேநேரத்தில் பிரான்சின் தலைநகரான பாரிஸில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் இலங்கை-இந்திய மளிகைப் பொருட்கள் கொள்வளவு நிலையம் ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இக்கொள்வனவு நிலையத்தில் இலங்கை - இந்தியப் பொருட்கள் யாவும் விற்பனை செய்யப்படுகின்றன.

1980-ம் ஆண்டு காலப்பகுதியில் தொழில் தேடிப் பிரான்ஸுக்கு வந்த இளைஞர்கள், சுமார் மூன்று வருடகாலம் தொழிலின்றிக் கஷ்டப்பட்டனர் எனவும் பின்னர் இவர்களது சுயமுயற்சியின் காரணமாக, சிறு முதலைக் கொண்டு ஸ்தாபித்து, இன்று பிரபல்யமிக்க இக்கொள்வனவு நிலையத்தினை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# "பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள அரசு பயப்படுகிறது!"

## சபையில் ஆனந்த தஸநாயக்கா

[கொழும்பு]

"பயங்கரவாதச் சட்டத்தை வைத்துக் கொண்டு கூட அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பயந்து நடுங்குகிறது. முதுகெலும்பு இல்லாத அரசு அந்தச்சட்டத்தை அப்பாவிச் சிங்களமக்களுக்கு எதிராகவே பயன்படுத்துகிறது.

எமது அரசியல் அமைப்புக்கு விரோதமாக தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக தமிழ் மக்களுக்கு விடுதலைக் கூட்டணியினரும் வடக்கு கிழக்கிலோ இந்தியாவிலோ பேசலாம். ஆனால் சிங்களமக்களாகிய நாம் அரசமைப்புக்கு விரோதமாகப் பேச முடியாது. தனிநாடு கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் மற்றவர்களையும் கைதுசெய்து தண்டனை வழங்குங்கள். அப்போது தான் உறுதி கொண்ட அரசாங்கமாக இருக்கமுடியும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் கொத்மலை எம். பி திரு. ஆனந்த தஸநாயக்கா.

தேர்தல் திருத்தச் சட்டமூல விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

"வடக்கு-கிழக்கு மக்கள் தாம் நினைத்தபடி இந்தியா செல்லலாம் வரலாம் சிங்கள மக்கள் அப்படிச் செய்ய முடியாது. அங்கு அரசு எதிர்ப்பு சுவரொட்டிகளை ஒட்டலாம், தென்பகுதிகளில் ஒட்டவும் முடியாது வைத்திருக்கவும் முடியாது.

"வடக்கு-கிழக்கு மக்களுக்கு முழுச் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தென் பகுதி மக்களுக்கு சுதந்திரம் இல்லை.

"சிங்கள இனத்தை பெரும்பான்மை என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

# சபையில் சிந்தியவை

நமது நிருபர்

அனில் முனசிங்கா; இந்த நாட்டின் வரலாற்றில் என்றுமே இடம்பெறாத தில்லுமுல்லுகள் கடந்த சர்வசன வாக்கெடுப்பின் போது இடம் பெற்றன. சர்வசன வாக்கெடுப்பின் பலாபலன்களை 83 ஜூலையில் அனுபவித்துவிட்டோம்.

அனில்: உங்களால் 'நக்ஸலைட்டு'கள் என வர்ணிக்கப்பட்ட சிறிலங்கா மக்கள் கட்சியினரை இச்சபைக்குள் வர நீங்களே வழியமைத்திருக்கிறீர்கள். அவர்கள் வருவதை நாம் வரவேற்கிறோம்.

அனில்: ஜனநாயகம் இந்த நாட்டில் மரணித்துக் கொண்டிருக்கும் போது எம். பிக்களாகிய நாம் இங்கு சிறிது கண் விழித்திருந்து விவாதித்தால் என்ன?

அனில்: இந்த நாட்டில் 25 சதவீதம் ஜனநாயகமாவது இருக்கும்வரை நான்தேர்தலில் போட்டியிடுவேன்.

பிரதமர்: சுதந்திரக் க சி இடைத் தேர்தல்களைப் பகிஷ்கரித்தால்..?

அனில்: நான் கட்சிக்குள் இருந்துக்கொண்டே இடைத் தேர்தலுக்காக போராடுவேன்.

பிரதமர்: வெறிகுட் நீர் ஒரு சிறந்த ஜனநாயகவாதி.

கொத்மலை எம். பி. தனந்த தசநாயக்க: இந்த சபையின் மூலம் மக்களின் அபிப்பிராயத்தை எவ்வாறுபெறமுடியும். உங்களில் அநேகரின் ராஜினாமாக் கடிதங்களைத்தான் ஒருவர் வைத்திருக்கிறாரே.

தசநாயக்கா: எதிர்க்கட்சியை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அரசுடன் எதிர்க்கட்சிகள் எப்படி ஒத்துழைக்க முடியும்?

தசநாயக்கா: தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை கொண்டு தேர்தல்களை நடத்துவதற்கு பயங்கரவாதிகள் விடுவார்களா?

தசநாயக்கா: தேர்தல்களையும் ஜனநாயகத்தையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையின் ஆரம்பகட்டமே இந்த தேர்தல் திருத்த சட்டமூலம்.

தசநாயக்கா: படங்கு சாக்கில் ஒட்டுப் போடுவது போல் உங்களது அரசியல் அமைப்புக்கே நீங்கள் 9வது தடவையாகத் திருத்தம் கொண்டு வருகிறீர்கள்.

ஹக்மீமன எம். பி. றிச்சர்ட் பத்திரன; யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது வாக்குப் பெட்டிகள் சிலரால் எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டன. அதுபோல் எதிர்வரும் இடைத் தேர்தல்களிலும் வாக்குப்பெட்டிகள் காணமல் போகலாம். இவ்வாறு வாக்குப் பெட்டிகளை சட்டபூர்வமாக்கவே இந்த திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

ஹலீம் இஷாக்: மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல், இடைத் தேர்தலில் மட்டுமல்ல கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலும் அரசு தலையிட்டுள்ளது.

ஹலீம் இஷாக்: தேர்தலில் காடைத்தனத்தையும் ஊழலையும் சட்டபூர்வமாக்கவே இத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது?

ஹலீம் இஷாக்: விஜயகுமாரணதுங்கசர்வாதிகார வழியில் செல்வதாகக்கூறினீர்கள். இப்போது நீங்கள் (அரசு) என்ன செய்கிறீர்கள்?

ரணில் விக்கிரமசிங்கா: நீர் தான் அப்படி பொறளைக்கூட்டத்தில் கூறினீர்.

ஹலீம் இஷாக்: இல்லை, நான் அப்படிக் கூறவில்லை. நீர் ஒரு பொய்யன்.

ஹலீம் இஷாக்: 1920ம் ஆண்டுமுதல் பிரிட்டிஷ்ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை எமதுமக்கள்அனுபவித்துவரும் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் நிலை இன்று ஏற்பட்டு வருகிறது.

ஹலீம் இஷாக்: சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிரிந்து நின்றபோது இருபிரிவுகளையும்

(8ம் பக்கம் பார்க்க)

JAEFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKODDAI

The Institute will reopen for the Second Term on Wednesday the 29th August 1984.

[1436] DIRECTOR

உ
சிவமயம்



நல்லைநகர்க் கந்தர்
திருஊஞ்சல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இவ்வருஷ மகோற்சவத்தை முன்னிட்டு 'நல்லைநகர்க் கந்தர் திருஊஞ்சற்' பாமாலையை, தேவஸ்தான அறங் காவலர் அனுமதிபெற்று மறுபதிப்புச்செய்து, கந்தப்பெருமானின் அடியார்களுக்கு இலவசமாக வழங்கத் திருவருள் பாலித்துள்ளது. இங்கு குறிப்பிடும் இடங்களில் அடியார்கள் இந்நூலைக் கேட்டுப்பெற்றுக்கொள்ளவும்.

1. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
2. பூபாலசிங்கம் புத்தகசாலை
மத்திய பஸ் நிலையம், யாழ்நகர்.
3. சோதிடவிலாச புத்தகசாலை
46, பெரியகடை, யாழ்நகர்.
4. குளோபல் பணியகம்
கூட்டுறவுப் பணிமனை, யாழ்நகர்.

குளோபல்
கொம்யூனிக்கேஷன்ஸ் லிமிட்டெட்
ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை வல்லுநர்கள்
யாழ்ப்பாணம்.
(யாழ். தபாற்கந்தோருக்கு அருகாமையில்)
ரெலிபோன்: 23015, 23249, 23312.

# அருட்சகோதரி மாகிறேற் மேரி

இருபத்தைந்து ஆண்டுகள் கிறிஸ்துவில் அருட்சகோதரியாக அரும் பணியாற்றிய அருட்சகோதரி மாகிறேற்மேரி கிறிஸ்துவில் அமைதியடைந்த செய்தி தமிழ் கிறிஸ்தவ உலகிற்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. மருத்துவத் தாதியாக அருட்சகோதரி ஆற்றிய அருபணியை யாருமே இலகுவில் மறக்கமுடியாது.

இறையன்பும், சேவை மனப்பான்மையும். அறிவியல்வளர்ச்சியும் அவரைத் துறவறத்தை நோக்கித் திசைதிருப்பின. இவர் தேவதாயின் பிறந்த நாளில் அருட்சகோதரியாகத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார்.

நோயாளிகளைப் பராமரித்தலைத் தன் வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்து கொண்ட இவ்வருட்சகோதரி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் கற்றுத் தன் அரும் பணியை ஆரம்பித்தார். 1970 இல் அயர்லாந்துசென்று மருத்துவத்தாதியாக உயர்கல்வியைப் பூர்த்திசெய்தார். தன் நோயை வெளிக்காட்டாது, புன்னகை முகத்துடனும், இன் சொல்லுடனும் தொடர்ந்து நோயாளிகளுக்குச் சேவை செய்தார்.

நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதன் வடிவமாக அவர் திகழ்ந்தார். அவரின் திடீர் மறைவு முழுக் கிறிஸ்தவ உலகுக்குமே பேரிழப்பாகும். அவர் ஆன்மா இறை கிறிஸ்துவில் அமைதியடைவதாக.

-செ. சிங்கராயர்.

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்,

மணமகன்:
திருநிறை செல்வன்
ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஸ்ரீ)
(பளை காவித்தியாலயம்)

மணமகள்:
திருநிறை செல்வி
ந. ஞானலக்ஷ்மி (ஞானு)
(பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

இடம்:
மணமகள் இல்லம்

காலம்:
29-8-84 புதன்கிழமை

முகூர்த்தம்:
காலை 7 மணி முதல் 9 மணி வரை

வரவேற்புபசாரம்:
மணமகன் இல்லத்தில் 30 8-84 வியாழக்கிழமை
மாலை 3 மணி முதல் 7 மணி வரை

திருமண வைபவத்திற்கு தாங்கள் யாபேரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
க. ஆறுமுகம்
[ஆசிரியர்கள், யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை],
"அம்பாள் அகம்",
மருதனார்மடம், இணுவில்.

திரு. திருமதி
கா. நல்லையா,
[மலாயன் பென்சனர்],
குப்பிளான்,
ஏழாலை.

[1456]

# இன்றைய பலன்

மாதம்— ஆவணி
திகதி—11(27-08-1984)
வாரம்— திங்கள்
திதி—பிரதமை முன் இரவு 11-39 வரையும்
நக்ஷத்திரம்—மகம் காலை 07-59ன் மேல் பூரம்

மேடம்:- வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரர்களால் மெருமகிழ்ச்கிக்கும் இடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும் பெரிய இடத்துத் தொடர்பு உங்களுக்கும் பெருமையைத் தேடித் தரும்.

இடபம்:- கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவுகிடைக்கும் இருப்பிட மாற்றத்திற்கான ஆலோசனைகளும் உருவாகும் அரசினர் ஆதரவும் கிடைக்கும் சிந்தித்துச் செயல்படவும்.

மிதுனம்:- சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும் வேண்டிய ஒருவரை சந்திக்கத்துடிப்பீர் மனதில் எண்ணங்கள்தோன்றி மறையும் ஆத்திரத்தை அடக்கி அமைதியான வழியில் நடக்கவும்.

கடகம்:- குடும்பக்கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும் உங்களைப் பற்றி புனைந்துரைகள் பரப்புவதற்குச்சிலர் முற்படுவார்கள் அதிக பேச்சைத்தவிர்க்கவும்.

சிங்கம்:- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும் தொழில்சப் ந்தமான கவலைகள் அதிகரிக்கலாம் உடல்நலம் பாதிக்கக் கூடும் சுகாதாரம் வேண்டும்.

கன்னி:- அவசரப்புத்தியினல் விபரீதம் விளையாடலாம் கொடுத்த இடத்தில் எதிர்ப்புக்கள் உருவாகும் உடல்நிலை சீர்குன்றும் கோபத்தை அடக்கின் நிலைமைசீர்பெறும்.

துலாம்:- புத்திரர் ஒருவரின் விவாகப் பிரிவால் கவலைகள் தோன்றும் குடும்பத்தில் அமைதி நிலவும் உறவினர்களின்வருகையால் உற்சாகம் மேலோங்கும் இடம்பிரிவதற்குரிய நிலை தென்படும்.

விருச்சிகம்:- சிறுபயணம் சிறுவிபத்தைத்தரும் சிந்தனைக் கிலேசம் சிறுரோகத்தையுண்டுபண்ணும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர் அவதானம் நன்று.

தனுசு:- புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் சூழ்நிலையல் நல்ல மாறுதல்களும் தென்படும் அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும்.

மகரம்:- தாய்வழிப் பெருமைக்கும் இடமுண்டு மனம் போல்யாவும் நடக்கும் கல்வியில் சிறப்பும் உறவினர்கொண்டாட்டமும் உண்டு.

கும்பம்:- வாழ்க்கையில் தென்றல் வீசும் காதல்சிட்டுச்களுக்கு கனிவானதினம் சணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும்அதிக சிந்தனையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்:- கிட்டிவரும்கெட்ட பெயர் தட்டிக்கழிக்கப் படும் இனிக்கப் பேசியவர்களே உபத்திரத்தில் மாட்டிவைப்பர்வஞ்சகமில்லாமல் வஞ்சகங்கள் இடம்பெறும் விழிப்புடனிருக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# "தனிநாடு தோன்றினலும் பயங்கரவாதம் மறையாது!"

## பாராளுமன்றில் பிரதமர் உரை

(கொழும்பு)

"இலங்கையில் தனி நாடொன்று தோன்றினலும் பயங்கரவாதம் மறைந்துவிடப் போவதில்லை" என்று பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா கூறினர்.

பாராளுமன்றத்தில் அவசர காலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தின் போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்த்து பேசியதாவது: "இலங்கையில் தனி நாடொன்று தோன்றினலும் பயங்கரவாதம் மறைந்துவிடப் போவதில்லை. ஒரு சர்வதேச சக்தியின் பின்னணியுடனேயே பயங்கரவாதிகள் இயங்குகின்றனர். அச்சக்தி இலங்கையின் இறைமைமீது கண் வைத்துள்ளது.

இந்தியாவில் வடபகுதிப் பயங்கரவாதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களின் நடவடிக்கைகளை முறியடிப்பதில் இந்தியா இலங்கைக்கு முட்டுக் கட்டையாக இருக்கின்றது,"

இப்பயங்கரவாதிகளை இலங்கைக்கு கையளிக்கும் விடயத்தில் இந்தியா இலங்கையுடன் ஒத்துழைக்கவில்லை. ஆனல் இதே வேளை பாகிஸ்தானில் தஞ்சமடைந்துள்ள சீக்கியத் தீவிரவாதிகளை தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசு பாகிஸ்தானை வற்புறுத்தி வருகின்றது" என்ருர். [கி]

# எதிர்க்கட்சி இணைப்புப் பற்றி பிரதமர் கருத்து

[கொழும்பு]

"இந்நாட்டை அரசு அழிக்கின்றது என்றும், ஜனநாயகத்தை அழிக்கின்றது என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை தோற்கடிக்கத்தான் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளோம் என்றும் எம் மீது குற்றம் சாட்டுகிறீர்களே, சரி நீங்கள் சகல எதிர்கட்சிகளும் ஒன்ருக இணைந்து எதிர்வரும் இடைத்தேர்தலில் எம்மைத் தோற்கடிக்க முன்வாருங்கள்."

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா தேர்தல் திருத்தச் சட்டமூல விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்.

மக்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை. உங்களுககு மக்கள்மீது நம்பிக்கை. ஏன் உங்கள் மத்தியிலேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லை? இந்நிலையில் நீங்கள் இணையவும் மாட்டீர்கள். இணைந்து எம்மை எதிர்க்கவும் மாட்டீர்கள். என்றும் பிரதமர் கூறினர்.

# பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் ரூ.31,000 கொள்ளை

(பச்சிலைப்பள்ளி)

பளையிலுள்ள பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சுமார் 31 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

வான் ஒன்றில் வந்தவர்களே இப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப் படுகிறது.

4 இளைஞர்கள் உள்ளே நுழைந்து பொருட்கள் கொள்வனவுசெய்ய வந்த கிளைமுகாமையாளர்களை களஞ்சிய அறைக்குள் பூட்டிவைத்து விட்டு காசாளரிடம் இருந்த பணத்தை கொள்ளையடித்துச் சென்ருர்களாம்.

## பண்பாளர் சிவஞானம்



தெய்வபக்தி, நாட்டுப் பற்று, தமிழ்ப்பற்று ஆகிய நற்குணங்களின் இருப்பிடமாக விளங்கியவர் அமரர் சிவஞானம்.

வைத்தியசேவையைக் குலவித்தையாகப் பெற்ற இவர் ஆயுர்வேதத்திலும், ஆங்கில வைத்தியத்திலும் புலமை மிக்கவராக விளங்கிச் செய்த சேவைகளால் பலராலும் மறக்கப்படாத பண்புகளுடன் விளங்கினர்.

எளியோர், பெரியோர், வறியவர், செல்வந்தர், படித்தவர், பாமரர் என்ற வேறுபாடு காட்டாது தன் வாழ்வின் இறுதிவரை சேவையாற்றினர்.

கோண்டாவில் மகாகணபதிக்கடவுளுக்கு மலரிட்டு வழிபடுவதும் நல்லை முருகனிடம் வெள்ளிக்கிழமைதோறும் செல்வதும் பூஜையறையில் அந்தரங்க பக்திவயப்பட்டு நிற்பதும் இவரது தவருத கடமைகளாய் இருந்திருக்கின்றன

ஆடம்பரமற்ற எளிமையான வாழ்வு, பிறர்க்கு இன்ன செய்யாது நடத்தல் என்பவற்ருல் உற்ருர், உறவினர் உலகோர் மதிக்க வாழந்த சிறப்பாளர் அமரர் த க சிவஞானம் மறைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது.

—எம். எஸ். ஸ்ரீ

## புதிய பரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

வேலணை மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை ஜும்மா பள்ளி வாசல் புதிய பரிபாலன சபை அங்கத்தவர்களை வக்புச் சபை நியமித்துள்ளது.

பின்வருவோர் சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஜனுப்களான .கே.என் எம் மீரான்சாகிபு, எம்.வை.எம் தாஹா' கே.எம்.மீரான் முகியிதீன், எம்.ஜி.பஸிர், எம். எஸ்.ஏ.புஹாரி, அல்ஹாஜ். எஸ்.எம் மீராலெப்பை, எம். எம்.மன்சூர்' எஸ்.ஏ ஸியூசுபு எம்.எம்.சஹாப்தீன், எம் எ. ஸி.நெயினு முகம்மது, எம். எம்,சபீக், எஸ்.எம்.ஏ.கரீம்.

# ரூபவாஹினி

## இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

திங்கள் 27 ந் திகதி
மாலை
6-35 சஞ்சிகை நிகழ்ச்சி (தமிழ்)
7-15 'கலையரங்கம்' 'நாதஸ்வரம்'(பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை குழுவினர்)

செவ்வாய் 28 ந் திகதி
மாலை
6-30 'அவள் ஒரு ஜீவநதி' உள்ளூர்த் திரைப் படம்-பாகம் 1 (தமிழ்)

புதன் 29 ந் திகதி
மாலை
5-30 நாட்டுவளம் 'கொழும்பு கோட்டை ரயில் நிலையம்' (தமிழ்)

வெள்ளி 31 ந் திகதி

## இன்று

மாலை
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
5-30 நாட்டுவளம் (சிங்களம்
5-35 'வூடி வூட் பெக்கர்' (ஆங்கிலம்)
6-00 பௌதிகவியல் கல்வி (ஆங்கிலம்)
6-20 'இயற்கையும் விஞ்ஞானமும் சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-35 ஊரும் உலகும்(தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'கலையரங்கம்' நாதஸ்வரக் கச்சேரி பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை குழுவினர்
7-45 வன விலங்குகள் நிகழ்ச்சி (ஆங்கிலம்]
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 தேசிய வர்த்தகப் பரீட்சை
9-00 ஒலிம்பிக் 84-88
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பொம்பா த ஜங்கிள் போய்' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 'ஜங்கிள் போய்' தொடர்ச்சி
11-05 நிகழ்ச்சிகள் முடிவு


ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை
மீண்டும் நடைபெறுகிறது!

தற்போதைய சூழ்நிலை கருதி
மாலை 6 மணிக்கு
கன்றுதிட்டி சந்தியிலிருந்து புறப்படும்.

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட், கன்றுதிட்டி.
தொலைபேசி: 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர், இல 6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23596
3. நியூ ப்ரசீதா சேல்ஸ் சென்ரர், இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22480

யந்திர வகைகள் குத்தகைக்கு வேண்டுமா?

இரும்பு கடைச்சல் யந்திரம் — மர கடைச்சல் யந்திரம் (LATHE), அச்சுயந்திரம் — புதிய போக்குவரத்து வாகனங்கள் — சலவைச் சாதனங்கள் — வைத்திய சாதனங்கள் — மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்.

★ சொத்துக்களை நிரந்தரமாக்கிக்கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தியடையச் செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.

★ 100% வருமான வரிச்சலுகையை உறுதிப் படுத்துவது குத்தகையே!

★ குத்தகை — உங்கள் வருமானத்தை விருத்தியடையச் செய்யும். இதனுல் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

TFC
த பிறுன்ஸ் கொம்பனி லிமிட்.,
249, மின்சார வீதி,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 23680

# வங்கி ஊழியர் சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கியொன்றின் ஊழியர்கள் கடும் சோதனைக்குட்படுத்தப் பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது.

வங்கிக்கு சமீபத்தில் இச் சோதனை நடந்ததாகவும், இதனை அவ்வூழியர்கள் ஆட்சேபித்ததாகவும் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை வழக்கம் போல் வங்கி ஊழியர்கள், கடமைக்குச் சென்ற போது, தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டனராம்.

இச்சம்பவம் பற்றி வங்கி மேலிடத்திற்கு புகார் செய்யப்பட்டுள்ளதாகதெரியவருகிறது. (க)

# அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளோரை வெளியேற பணிப்பு

(சாவகச்சேரி)

''அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் அரச உத்தியோகத்தர்கள் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இம்மாதம் 30-ம் திகதியுடன் முகாம்களை விட்டு வெளியேற வேண்டும் எனச் சுற்றுநிருபம் மூலம் பணிக்கப்பட்டமையை குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவை கண்டித்துள்ளது.

இந்நிலையில் இவ்வாறு வெளியேற்றப்பட விருக்கின்ற அகதிகள் குடும்பங்களின் நலன்களைக்கவனிக்க வட பகுதியில் இருக்கின்ற தொண்டர் ஸ்தாபனங்கள் உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரல் வேண்டும் எனப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது இல்லையேல் இக் குடும்பங்கள் எவ்வித எதிர்காலத் திட்டங்களுமின்றி அல்லல்பட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பேரவை கவலை தெரிவித்துள்ளது.


## தொழிற் பயிற்சிகள்

★ COMPUTER PROGRAMMING BASIC COBOL கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பியரிங் ஆரம்பத்தில் இருந்து இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.

★ எலக்றிக்கல் வயறிங்

★ எலக்றிக்கல் வெல்டிங் இரண்டு மாத செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.

★ மோட்டார் றீவைண்டிங் சகல வித மின்சார பொருட்கள் வைண்டிங் செய்யப்படும்முறை பயிற்சியளிக்கப்படும்

★ ஏயர் கொண்டிசனிங்

★ HOTEL MANAGEMENT, FRENCH பயிற்சிகள் ஆரம்பம் 05—09—1984

சனசமூகம் நிலையங்களினூடாக பயிற்சிபெறும் மாணவர்களுக்கு சலுகைக்கட்டணங்களில் பயிற்சியளிக்கப்படும். விபரங்களுக்கு நேரில் அல்லது உமது சனசமூக நிலையங்களுடன் தொடர்புகொள்ளவும்.

Jaffna Technical Institute

ஸ்ரான்லிவீதி,(றெயில்வேகடவையருகாமை)யாழ்ப்பாணம்.



ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி [யாழ் நகர்]
10-30, 2-30, 4-45, 700
Michael caine David Warner in
THE ISLAND
action packed
adults only

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6,30
25—27
HAUNTED HOUSE OF HORROR
(Adults only)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
பல்லாண்டு வாழ்க
(புத்தம் புதிய பிரதி-கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி. ஆர். - தேவிகா
ஆனந்த ஜோதி

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜ்ஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
மனோகரா
(புதிய பிரதி)

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
ஜெய்சங்கர்
ஸ்ரீதேவி
முடிசூடா மன்னன்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
நாகேஷ் - ரவிச்சந்திரன்
எங்களுக்கும் காலம் வரும்
[புதிய பிரதி]

வின்சர் (யாழ். நகர்)
27-8-84 வரை
தினசரி 10-30. 2-00, 4-30
EAGLE'S WING
A BATTLE FOR SURVIVAL
உயிர் வாழ்வதற்கு உரிமைப் போராட்டம். திகிலூட்டும் வியக்கத்தக்க காட்சிகள் நிறைந்த சித்திரம்


## அந்தியேட்டி அழைப்பு

### திருமதி தம்பையா குங்குமம்

பிறப்பு: 14-01-1897 இறப்பு: 29-07-1984

துன்னாலை தெற்கு திருமதி தம்பையா குங்குமம் 29-7-1984ந் திகதி சிவபதமடைந்தார். இவர் காலஞ் சென்ற சின்னத்தம்பர் தம்பையாவின் அன்புப் பாரியாரும், திருமதி சபாரத்தினம் சிவபாக்கியம், திரு. த. துரைராசா நிதி உதவியாளர் (களஞ்சியம்) கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். (குருபாவின் சிஷ்யன் கிறியேசன் சுவாமி), திரு. த. விஜயரத்தினம், சீனித் தொழிற்சாலை, கந்தளாய் ஆகியோரின் அன்னையுமாவார். மரணச்சடங்கில் கலந்துகொண்ட உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28-08-84ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை வல்லிபுரக்கோவிலில் நடைபெறும். அத்தருணம் சுற்றத்தார், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

திருமதி சபாரத்தினம் சிவபாக்கியம்
திரு. த.துரைராசா (கிறியேசன் சுவாமி)
திரு. த.விஜயரத்தினம்

துன்னாலை தேற்கு, (மக்கள்)
கரவெட்டி.

(1276)

## கேள்விப் பத்திர விற்பனை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் விசுவமடுவில் உள்ள ''றெட்பானா'' ஸ்தாபனத்தால் கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

**நீர் இறைக்கும் இயந்திரங்கள்:**

1. 4 8 கிறேவீஸ் இந்தியன் என்ஜின் 3,000 R. P. M. காற்றுக்குளிரூட்டி (டீசல்) — 13. பம்பு 195 N. S. P. சிக்மா பம்புடன் இணைக்கப்பட்டது. [ஒரு சில மணித்தியாலங்களே பாவிக்கப்பட்டவை]
2. இங்கிலாந்து வில்லியஸ் என்ஜின் மார்க் 30.3'' சிக்மா பம்புடன் இணைக்கப்பட்டது
3. இந்தியன் வில்லியஸ் என்ஜின் மார்க் 25.2'' சிக்மா பம்புடன் இணைக்கப்பட்டது.

**அல்க்கத்தீன் பைப்புகள்**

1. 1½'' அல்க்கத்தீன் பைப் [நல்ல நிலையில் உள்ள பாவிக்கப்பட்டவை விரும்பிய துண்டங்களாக இருக்கின்றன]
2. 1'' அல்க்கத்தீன் பைப் 300' துண்டங்களாக இருக்கின்றன.

கோழிக்கூட்டு வலை (½'') (இறக்குமதி செய்யப்பட்டது) 6' துண்டுகளாக 1000 யார் உண்டு.

கேள்விப் பத்திரங்கள் யாவும்
**திட்ட இணைப்பாளர், ''றெட்பானா'', விசுவமடு**
எனும் விலாசத்திற்கு
**19-9-84-ம் திகதிக்கு முன்பதாக**
அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொருட்களை 1-ம் திட்டக்காரியாலயத்தில் கிழமை நாட்களில் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்களை அனுப்புவோர் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்விப்பத்திரங்கள் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

திட்ட இணைப்பாளர்,
றெட்பானா, விசுவமடு.


(1445)

## நினைவஞ்சலி

### பாலகுமார் குமாரசுவாமி

(கடற்படை உத்தியோகத்தர்)

தோற்றம்: 2-6-51 (அகால) மறைவு: 29-7-84



கம்பீர நடையுடைய
வீரனாகக் கடமையொடு
கண்ணியமும்உடையோ
னாக அன்புசெறி இல்
வாழ்க்கைத் தலைவனாக
அறம் வளர்த்து விருந்
தோம்பும் அறிஞனாக
தன் காதற் புதல்வற்
கோர் தந்தையாகத்
தரணியெலாம் புகழு
மோர் தனயனாக மங்
காத புகழொடு நீ
வாழ்ந்ததெண்ணி
நினையறிவார் நின்னை
நிதம் நினைவுகூர்வார்.

பாலகுமாரின் ஈமச்சடங்குக்கு வருகை தந்த உறவினர்க்கும், நண்பர்க்கும், கடற்படை உத்தியோகத்தர்க்கும், சிறைச்சாலை உத்தியோகத்தர்க்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும் எமது துன்பத்தில் பங்குகொண்டு பல்லாற்றானும் எமக்குதவிய யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி!

மனைவி, மகன், தந்தை, தாய், சகோதரர்.

''பொன்னையா வளவு''
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(1431)

## 23ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



### திரு. சங்கரன் மனோகரன்

(பட்டயக் கணக்காளர்)

மலர்வு: 05-06-1955 உதிர்வு: 05-08-1984

எமது இல்லத்தில் அணையாத தீபமாய் ஒளிவீசிய அன்புத் தெய்வமே! உம் பசுமையான நினைவுகளை எம் நெஞ்சங்களில் நிறுத்திச் சென்றவனே நாளும் உம்மை மறவோம்.

உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

09-08-1984 அன்று அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் உதவிகள் புரிந்து துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தனிப்பட்ட முறையில் நன்றிகூறமுடியாமைக்கு வருந்துகிறோம்.

**பெற்றோர், மனைவி, சகோதரர்கள், சகோதரி, மாமன்மார்கள், உற்றார், உறவினர்.**

37, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

1420

## பதில் தாக்குதல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் முயற்சிப்பது அர்த்தமற்றதாகும். ஆனலும் பயங்கரவாதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றி, நாட்டில் அமைதியை ஏற்படுத்தவேண்டியது அரசின் கடமையாகும். வடபகுதியில் பயங்கரவாதம் உருவெடுத்த பின்னர் தமிழர்கள்தான் மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். குறிப்பாக, பயங்கரவாதிகள் ஆயுதப்படையினரைவிட அதிகளவில் தமிழர்களைத்தான் கொலைசெய்து வருகின்றனர்'' என்று தெரிவித்தார்.

## நாளைமறுதினம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியை மீண்டும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தது பற்றி குறிப்பிட்ட திரு அமிர்தலிங்கம் திரு. பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் இலங்கை அரசாங்கத்தின் போக்கில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தும். இதனை எல்லாத் தமிழ் மக்களும் வரவேற்பார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆரம்ப வழிகாட்டிய அவரால் மாத்திரம்தான் இப்பிரச்னையை முழுமையாக தீர்த்து வைக்க முடியும்' என்று தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின்முழுமையான நல்லெண்ணத்தைத் தொடர்ந்தும் பெறப் போவதாகவும் இந்தியாஇந்த விவகாரத்தில், இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் நிர்ப்பந்தங்களைக் கொடுத்து, பிரச்னையைத் தீர்த்துவைக்க முயலும் என்று எதிர்பார்ப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

## சரோஜினி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கில் 77 ஜன 26 ல் கிளிநொச்சி கனகாம்பிகைகுளத்தைச் சேர்ந்த ஜனப் முகமது மொகிதீன் என்பவர் அவருடைய மகள் சரோஜினியைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் ரி. லிங்கராசா, ரி. தனராஜசிங்கம், கே. அரியநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகினர். அரசதரப்பில் அரசசட்டத்தரணி கே. சிறிஸ்கந்தராசா ஆஜரானர். (க)

## வங்கிமூலம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஒழுங்குகள் ஏற்பாடு செய்யும்போது சில தவிர்க்கமுடியாத காலதாமதங்கள் ஓய்வூதிய கொடுப்பனவுகளை உரியநேரத்தில்வழங்கும் திட்டத்தை செயலற்றதாக்கிவிடுகிறது.

இக்காரணங்களை கருத்தில்கொண்டு முடிந்தவரை கூடுதலான ஓய்வூதியகாரர்களுக்கு வங்கிகள் மூலம் ஓய்வூதியம் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பாக மட்டுமல்லாது மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க காரணமாகவுள்ளது. தங்களுக்கு வசதியான வங்கியில் நடைமுறைக்கணக்கொன்றை அல்லது சேமிப்புக்கணக்கு ஒன்றை இயன்றவரை ஆகஸ்ட் மாதத்தின் முன் ஆரம்பித்து அவ்வங்கியின் பெயர், விலாசம் கணக்குஇலக்கம் ஆகியவற்றை உடனடியாக அரசாங்க செயலகத்திற்கு அனுப்பிவையுங்கள் [க]

# சேர் ராஸிக்பரீத் மறைவு: யாழ். முஸ்லிம்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அல்ஹாஜ் சேர் ராஸிக் பரீத் அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்த துக்கமான செய்தியைக் கேள்விப்பட்டதும் யாழ். வாழ் முஸ்லிம்கள் சொல்லொண்ணு துயரமடைந்தனர். பெரும்பாலானேர் அழுதனர். நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் அரும்பெரும் சேவை செய்த முதுபெரும் தலைவர்களில் அதிவிசேஷமாக ஈழத்திற்கே எடுத்துக்காட்டாக மிளிர்ந்தவர். உயரிய குறிக்கோளுக்கு செயற்பட்டு எத்தனையோ பேர்களின் வாழ்விற்கு ஏணியாக இருந்த பெரும் தேசியத் தலைவர்; பற்பல தியாகங்களைப் புரிந்த புண்ணியமிக்க சிலரை இழந்துவிட்டோமே எனப் புலம்பினர்.

வெள்ளிக்கிழமை முஸ்லிம்களின் வியாபார ஸ்தலங்கள் கல்விக்கூடங்கள் யாவும் மூடப்பட்டன. முஸ்லிம்மக்கள் அன்றிரவுபள்ளிவாசல்களில் ஒன்றுகூடி ஜனஸா தொழுகை, விசேட துவாப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். விசேடமாக மானிப்பாய் வீதி, முஹியதீன் பள்ளியில் கதீபு - எஸ் சக்கத்துல்லாஹ்அவர்களால்ஜனஸா தொழுகை நடத்தப்பட்டு, யாஸீனும் ஓதப்பட்டு அன்னரின் ஆத்மா 'பிர்தவுஸ்' என்னும் சொர்க்கத்தில் சேர்க்க வேண்டுமென எல்லாம்வல்ல ஏகநாயகனை வேண்டிக்கொண்டார்கள்.

## பதில் நீதிபதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதே சமயம் யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தை உடன் கூட்டுமாறு சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

அச்சுவேலியில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்து பதில் நீதவானின் வீடு உட்பட நான்கு வீடுகள் தீக்கிரையாகின.

வீடுகள் தீக்கிரையானதுடன் வீடுகள் உடைந்து சேதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பதில் நீதவானின் வீட்டுப் பொருட்கள் யாவும் எரிந்து சாம்பலாகிவிட்டன. குசினியுடன் சேர்ந்த 3 அறைகள்மட்டும் முழுதும் எரியாத நிலையில் உள்ளன.

சம்பவம் நடந்தபோது வீட்டில் பதில் நீதவானும், கண் பார்வையற்ற அவரது மாமியாரும், பணியாளரும் மட்டுமே இருந்ததாகக் கூறப்படுகிறது.

முற்பக்கத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டபோது 'கிழவிகளை ஒன்றும் செய்யமாட்டார்கள் நீங்கள் ஓடிவிடுங்கள்' என்று மாமியார் கூறியதால் பதில் நீதவான் பின்பக்கத்தால் ஓடிவிட்டதாக கூறப்படுகிறது.

பதில் நீதவானின் கைக்கடிகாரம், மூக்குக் கண்ணுடி, உடைகள் சட்டப் புத்தகங்கள் யாவும் எரிந்துவிட்டன. நேற்று நண்பகல்வரை பதில் நீதவானின் அலுவலக அறை எரிந்து கொண்டிருந்தது.

வீட்டிற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த அவரின் காருக்கு தீவைக்கப்பட்டபோதிலும், கார் எரியவில்லையென்று கூறப்படுகிறது.

ஜூலைகலவரங்களினுல்பாதிக்பட்டு வந்து அச்சுவேலியில் தங்கியிருந்த அகதிகளின் வீடொன்றும் தீக்கிரையாகியுள்ளது

பதில் நீதிபதி குடும்பத்தினர் வேருெரு வீடொன்றில் தஞ்சமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நேற்று மல்லாகம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை சட்டத்தரணிகள் உட்படப் பெருந்திரளான மக்கள் சென்று சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டனர்.

வீடுகள் எரிந்துகொண்டிருந்தபோது சுற்றிவர தொடர்ச்சியாக வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், மக்கள் சிதறி ஓடியதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்களை நேரில் பார்க்கச்சென்ற சில வெளிநாட்டு நிருபர்கள் அவ்விடத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையமொன்றில் தடுத்துவைக்கப்பட்டுப் பின்னர் மேலிடத்தின் உத்தரவின்பேரில் விடுதலைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## துர்க்காதேவி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று கொடியேற்றத்துடன் திருவிழாவினை ஆரம்பிக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமோ இதற்கு முற்றிலும் வித்தியாசமான தனித்துவமாக உளது. ஆலயத்தின் மகிமையை அம்மாளின் சக்தியால் உணரப்பட்டு தெல்லிப்பழை என்னும் கிராமம் சைவமக்கள் மத்தியில் மாத்திரமல்ல இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட உலகின் பல்வேறு பகுதியிலுமுள்ள மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

அற்புதமான மகாசக்தியின் அருள்பெற்று செல்லும் பக்தகோடிகளுக்கு இன்று உற்சாகம் பெங்கும் விழா ஆரம்பிக்கின்றது. இன்று முதல் அன்பர்கள் பக்திசிரத்தையுடன் ஆலயத்திற்கு செல்லும்காட்சி பரவசமூட்டுவதாக அமையும். புதன்கிழமை ஆவணி சதுர்த்தி சைவமக்களின் சிறப்பான வணக்கத்துக்குரியநாள் என்பதை அன்று தேவஸ்தானத்தில் கூடும்ஆயிரக்கணக்கான பக்தர்களின் எண்ணிக்கையிலிருந்து புரிந்துகொள்ள முடியும். நான்காம் திகதி செவ்வாய்கிழமை வேட்டைத் திருவிழாவும், புதன்கிழமை சப்பர திருவிழாவையும், வியாழக்கிழமை அழகிய தேர் பவனியில் உலக மகாசக்தியான ஸ்ரீ துர்க்கை அம்பாள் வெளிவீதி உலாவரும் காட்சியையும் கண்டு புரிப்படைய ஆலயத்தில் கூடஇருக்கும் பக்தர்களின் வசதிகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கு ''சிவத்தமிழ்ச் செல்வி'' தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையிலான தொண்டர்கள் ஊக்கமுடன் செயற்படுகின்றனர். திருவிழாக்கள் நேரகாலத்துடனேயே நடைபெறவிருக்கிறது.

வெள்ளிக்கிழமை ஸ்ரீ துர்க்காதேவி திருக்கேணியிலே தீர்த்தம் ஆடும் காட்சியுடன் திருவிழாக்கள் இனிது நிறைவு பெற உள்ளன.

கேட்போர்கேட்டதெல்லாம் வழங்கும் மகாசக்தியின் அருளால் இன்றைய பிரச்சனைகள் தீரவும் இன்னல்கள் நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டு என்பதே எல்லோர் இதயங்களில் இருந்தும் எழும் பிரார்த்தனையாக இருக்கும் எனலாம்

**ஜனனி புஷ்பநாதன்**

## நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லைக்குமரன் பூங்காவன உற்சவத்தை முன்னிட்டு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்றுமாலை 6மணிக்கு நல்லைக் குருமகா சந்நிதானம் அவர்களின் சேரலாற்றை 'நல்லைக்குருமணி'யாக வில்லிசை வித்தகர் எஸ் எஸ் சர்மாவின் ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர் வில்லிசைப்பார்கள்.

# இப்படியும் நடக்கிறது

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு என்பது இப்பொழுது சர்வசாதாரணமாகும், ஆனல், இவர்களில் எத்தனை பேர் உயிருடன் திரும்புகின்றனர்? 'திரும்பினுலும்' சடலமாவது உடனடியாகக் கிடைக்கிறதா என்பது......கவலைக்கிடமாக இருக்கிறது.

எஸ். ஸ்ரீராகவன் காரைநகரைச் சேர்ந்தவர். ஒரு கிரேக்க கப்பலில், வானெலிக் கட்டுப்பாட்டாளராகச் சில மாதங்களுக்குமுன்னர்தான் வேலையைப் பொறுப்பேற்ருர்.

காலனுக்கு இடமென்ன, நேரமென்ன. டுபாய்க்கு அருகில் இவர் வேலைபார்த்த கப்பல் சென்றுகொண்டிருந்தபோது மாரடைப்பினுல் இவர் காலமானதாக இவரது பெற்ருேருக்கு அறிவிக்கப்பட்டது. அதே நேரத்தில், அன்னரின் பூதவுடல் உடனடியாக இலங்கைக்கு அனுப்பிவைக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கப்பல் உரிமையாளர்கள் செய்தி அனுப்பியிருந்தனர்.

உயிருடன்தான் இல்லாவிட்டாலும், பூதவுடலையாவது காணமாட்டோமோ என்று ஏங்கினர் பெற்ருேர்.

நிமிடங்கள் மணியாகி, நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதமாகிவிட்டது. ஒரு தகவலும் இல்லை!

கடைசியாக, அன்னரின் பூதவுடல் விமானமார்க்கமாக கடந்தவாரம் ஊர்வந்து சேர்ந்தது. நாற்பத்து ஐந்து நாட்களின் (ஒன்றரை மாதத்தின்)பின்னர்!

'ஊடுருவி

# 'திரிபோஷா' மாவைத்தூக்கி எறிந்து அட்டகாசம்

[வண்ணுர்பண்ணை]

வறியகுடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்ட 'திரிபோஷா' சத்துணவு மா பொதிகளைச் சேதப்படுத்தியவர்களுக்கெதிராக நடவடிச்கை எடுக்குமாறு புங்குடுதீவு வல்லன் பகுதி மக்கள் சர்வோதய அமைப்பாளருக்கு முறையீடு செய்துள்ளனர்.

புங்குடுதீவு வல்லன் பகுதியில் உள்ள சர்வோதய வைத்திய சேவை நிலையத்தில் குழந்தைகளுக்கு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த 240 திரிபோஷா மாப்பொதிசுள் அங்கு திடீரென உட்புகுந்த கோஷ்டி ஒன்றினுல் சேதப்படுத்தப்பட்டது.

இச்சத்துணவைப் பெறுவதற்குத் தமதுகுழந்தைகளுடன் வரிசையாக நின்ற தாய்மார்களுக்கு இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

குழந்தைகளைப் பரிசோதனை செய்து ஊசிமருந்து ஏற்றுவதற்கும். சத்துணவுப்பொதிகளை வழகுங்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போது இச்சம்பவம் நடந்துள்ளது. குழந்தைகளுக்கான 240 திரிபோசா சத்துணவுப் பைக்கட்டுகளை எடுத்து வீதியில் எறிந்து சேதப்படுத்தியதாக இப்பகுதி தாய்மார்கள் முறையிட்டுள்ளனர்.

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையிலும் இத்திரிபோஷா சத்துணவு தட்டுப்பாடாக இருந்த போதும் சர்வோதய சமித்தியின் முயற்சியால் இவை வழங்கப்பட்டு வந்தன. மாதம் ஒருமுறை இந்த குழந்தைகளுக்கான கிளினிக், சத்துணவு வழங்குதல் நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்று வந்தன, கடந்தவாரம் குழந்தைகளுடன் இந்த நிலையத்திற்கு வருகை தந்திருந்த தாய்மாருக்கு இச்சம்பவம் பெரும் கவலையைக் கொடுத்ததுடன் குழந்தைகளுக்கு வழங்கும் இலவச உணவு மண்ணில் வீசப்பட்ட காட்சி தாய்மார்களை வயிறெரிய வைத்துவிட்டது.

## சபையில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரிக்குமாறு கேட்டோம். 2 ஆண்டுகளாகக் தேர்தல் ஆணையாளர் கடத்தி வந்தார். இன்று ஸ்ரீலங்கா மக்கள்கட்சி அங்கீகாரம்கோரி இரண்டு மாதங்களில் அங்கீகாரம் கிடைத்துவிட்டது எமது வாக்குகளைப் பிரிக்கவே அப்படிச் செய்திருக்கிறீர்கள் உங்கள் உள்நோக்கம் மக்களுக்குப் புரியும்.

பிரதமர்; ஜனதிபதி தேர்தல் அநியாயமாகநடந்ததென்றும் சர்வசன வாக்கெடுப்பில் ஊழல்கள் நடந்ததென்றும் கூறுகிறீர்கள் ஜனதிபதி தேர்தலில் எமது ஜனதிபதிக்கு வாக்களித்த 53 வீதமான மக்களை மீண்டும் ஆட்சி பீடத்திலிருக்க அனுமதி தாருங்க'' என்று ஜனதிபதி கேட்கும்போது 2 மாதங்களில் ஜனதிபதியின் கோரிக்கையை நிராகரித்து உங்களுக்கு வாக்களிப்பர் என எதிர்பாக்கிறீர்களா?

பிரதமர்: மதவாச்சி எம்பி (மைத்திரி) திருமதி சிறிமாவோ பண்டரநாயக்காவிலோ கட்சியிலோ கொண்ட விருப்பத்தினுல் தான் தொடர்ந்தும் அககட்சியில் இருக்கிருர் என எண்ணக்கூடாது இந்த உலகில் அவருக்கு எதுவும் செய்ய முடியாத நிலையிலேயே இன்னும் அக்கட்சியில் இருக்கிருர்.

# இளைஞர் திடீர் மறைவு

(சாவகச்சேரி)

மட்டுவில் சிவன் கோயிலடியைச் சேர்ந்த கதிரவேலு பாலச்சந்திரன் (வயது18) என்பவரைக் சாணவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

வாய்பேச முடியாத இவர் கடைசியாகக் காணப்பட்டபொழுது பச்சை நிறக் கோடுடைய சாரம் அணிந்திருந்தார் என்றும் நடக்கும்போது கழுத்தை சரித்து காலை வீசி நடப்பார் என்றும் மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேவை வழக்கத்திலும்பார்க்க முன்கூட்டி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாடசாலைகளுக்கு இது பற்றி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.